கடந்த மாத பதிவுகள்


# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 24.06.2012

தேனீ 10 வருடங்கள் 22.02.2002 - 22.02.2011



முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow


## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (54)

54. பத்திரிகையும் ஒலிபெருக்கியும் வளர்ப்பு நாயும் அடையாளம் காட்டிய புலிகளின் சிறை அமைவிடம்!



நாம் சிறை வைக்கப்பட்டிருந்த Tank – 2 என்ற வதை முகாம் ஆனைக்கோட்டையிலிருந்தது. இந்த வதை முகாம் 24 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு சிறையாகும். தினமும் இங்குள்ளவர்களில் சிலர் இரவு நேரங்களில் வெளியே அழைத்துச் செல்லப்படுவதும், சிலர் புதிதாக உள்ளே வருவதுமாக இருக்கும்.

அநேகமாக இரவு உணவு முடிவுற்று கைதிகள் எல்லோரும் படுக்கப்போன பின்னர், நள்ளிரவை அண்மித்த நேரத்தில் சில புலிப் புலனாய்வாளர்கள் கையில் ரோர்ச் லைற்றுடன் வந்து படுத்திருப்பவர்களை எழுப்புவார்கள். எல்லோரும் எழுந்துகொண்ட பின்னர், முதலில் கைதியின் இலக்கத்தை அழைத்துப் பின்னர் பெயரையும் அழைப்பார்கள். நள்ளிரவில் திடீரென்று அழைப்பதால், அழைக்கப்பட்டவர்கள் பல்வேறு மனநிலையில் இருப்பார்கள். என்னத்துக்காக அழைக்கிறார்கள் என்ற மனக்குழப்பம் அவர்களை அலைக்கழிக்கும்.

ஏனெனில் அவர்கள் விசாரிக்கப்பட்ட முறை அல்லது சித்திரவதை செய்யப்பட்ட விதத்தை வைத்து, புலிகள் தமக்கு என்ன தண்டனையை வழங்குவார்கள் என்ற விடயத்தை அவர்கள் ஓரளவு ஊகித்து வைத்திருப்பார்கள். அதை வைத்து தமக்கு மரண தண்டனை நிறைவேற்ற அழைத்துச் செல்கிறாhகளா, விடுதலை செய்ய அழைத்துச் செல்கிறார்களா அல்லது அவர்கள் நடாத்தும் பண்ணைகளுக்கு வருடக்கணக்கான உடலுழைப்புக்காக அழைத்துச் செல்கிறார்களா என்பதை கைதிகள் ஓரளவுக்கு ஊகித்து விடுவார்கள்.

அழைக்கப்பட்ட கைதிகள் இரும்புக் கதவுக்கு அருகே சென்றதும் வெளியே எடுக்கப்படுவார்கள். பின்னர் அவர்கள் உடுத்திருக்கும் சிறைச்சாலைக்குரிய சாரம் களையப்பட்டு, முன்னர் அவர்களிடமிருந்து வாங்கி வைத்திருந்த அவர்கள் உடுத்து வந்திருந்த உடைகள் அல்லது புதிய உடைகள் வழங்கப்படும். அதன்பிறகு அவர்களது கண்கள் கறுப்பத் துணிகளால் கட்டப்பட்டு, வான்களில் அல்லது சைக்கிள்களில் ஏற்றிச் எங்கோ கொண்டு செல்லப்படுவர்.

இந்த மாதிரி வெளியே கொண்டு செல்லப்படுபவர்கள் விடுதலைக்காகத்தான் கொண்டு செல்லப்படுகின்றனர் என நினைத்து, உள்ளே இருப்பவர்கள் அவசர அவசரமாகத் தமது வீடுகளுக்குச் சில தகவல்களை இரகசியமாகச் சொல்லி விடுவர். ஆனால் அவர்கள் வீடு சென்று சேர்ந்தால்தானே தகவல்கள் உரியவர்களுக்குப் போய்ச் சேர்வதற்கு?

என்னுடன் ஒன்றாக உள்ளே இருந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர் இவ்வாறு நள்ளிரவில் அழைத்துச் செல்லப்பட்ட பலரிடம் தனது வீட்டுக்குத் தகவல் சொல்லிவிட்டதாகவும், ஆனால் தான் விடுதலை செய்யப்பட்டு வீடு வந்தபின்னர் அதுபற்றித் தனது மனைவியிடம் விசாரித்த போது, அப்படி யாரும் வந்து தனக்கு எவ்வித தகவலும் சொல்லவில்லையென்றும் சொன்னதாக என்னிடம் கூறினார். நாம் இருவரும் விடுதலையாகி வெளியே வந்தபின்னர் ஒருமுறை கதைக்கும் போதே இதனை அவர் என்னிடம் சொன்னார். இதனால் ஆத்திரமடைந்த அந்த ஓய்வுபெற்ற அதிபர், தான் தகவல் சொல்லிவிட்ட நாவாந்துறையைச் சேர்ந்த சிலரைத் தேடி அவர்களது வீடுகளுக்குச் சென்று விசாரித்த போது, அவர்களது வீட்டவர்கள் புலிகள் தமது அன்புக்கு உரியவருக்கு அவர் செய்த குற்றத்துக்காக மரண தண்டனை நிறைவேற்றிவிட்டதாக தம்மிடம் வந்து அறிவித்தாகச் சொல்லி அழுது குழறியதாகப் பின்னர் சொன்னார்.

அவர் இன்னொரு சுவாரசியமான தகவலையும் என்னிடம் சொன்னார். அவரை வரணியிலுள்ள ‘இறைச்சிக்கடை’ முகாமில் ‘உரிய’ முறையில் விசாரித்த பின்னர், ஆனைக்கோட்டை முகாமுக்குக் கொண்டு வந்து இறுதி விசாரணையை நடாத்தியுள்ளனர். அவர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர் என்றபடியால், அந்த இடத்தை அடையாளம் பிடிக்கிறாரோ என்று அறிவதற்காக அந்த இடம்பற்றி அவரிடம் விசாரித்திருக்கிறார்கள். அவர் ‘தெரியவில்லை’ எனப் பதிலளித்திருக்கிறார்.

ஆனால் பின்னர் சில நாட்கள் அவரை விசாரணைக்காக சிறைக்கூண்டுக்கு வெளியே அழைத்து வந்து விசாரித்த நேரங்களில், நாய் ஒன்று அவருக்கு அருகே வந்து படுத்துக்கொள்வது வழமையாக இருந்திருக்கிறது. முதலில் அதைப்பற்றி பெரிதாகக் கவனிக்காத அவர் பின்னர் கூர்ந்து கவனித்த போது, அது தான் வளர்க்கும் தனது வீட்டு நாய் என்பது தெரிய வந்திருக்கிறது. அதை வைத்து தனது நாய் உலவித் திரியும் மிகவும் கிட்டிய தூரத்திலேயே தான் சிறை வைக்கப்பட்டிருப்பதை அவர் புரிந்து கொண்டார்.

என்னை முதன்முதலில் அங்கே கொண்டு சென்ற போதும், இதேமாதிரி அந்த இடம் எது என்று தெரிகிறதா என புலிகள் விசாரித்தனர். நான் சாவகச்சேரியாக இருக்கலாம் என அவர்களைத் திசைதிருப்புவதற்காகச் சொல்லியிருந்தேன். என்னைக் கொண்டு வரும்போது எனது கண்கள் கட்டப்பட்டிருந்தாலும், அவர்கள் என்னை ஏற்றிச் சென்ற சைக்கிள்கள் சென்ற திசையை வைத்து ஓரளவுக்கு அந்த இடத்தை அனுமானித்திருந்தேன். எனது ஊகம் சரியென்பதை பின்னர் இரண்டு சம்பவங்கள் நிரூபித்தன.

நான் அங்கே தடுத்த வைக்கப்பட்டிருந்த 6 மாதத்தின் இறுதி வாரங்களில் கைதிகளுக்கு வாசிப்பதற்காக சில பத்திரிகைகள் தரப்பட்டன. (அது எவ்வாறு சாத்தியமாயிற்று என்பதைப் பின்னர் விளக்குவேன்) அப்படி வந்த பத்திரியையொன்றின் பின்புறத்தில் ஒருமுறை ‘நாயகபாலன் ஸ்ரோர்ஸ் – மானிப்பாய்’ என முத்திரை (சீல்) பதிக்கப்பட்டிருந்தது. இந்த நாயகபாலன் ஸ்ரோர்ஸ்சையும் அதன் உரிமையாளரையும் எனக்கு நன்கு தெரியும். அவர் மானிப்பாய் வீதியில் குளப்பிட்டியிலிருந்து செல்லும் வீதி சந்திக்கும் இடத்தில் ஒரு சிறிய பத்திரிகை விற்பனை நிலையமொன்றை நடாத்தி வந்தார். அவர் மாதந்தோறும் எமது ‘யாழ் புத்தக நிலைய’த்துக்கு வந்த சீன சஞ்சிகைகளையும் எடுத்து விற்பனை செய்து வழக்கம். அவருடைய கடைக்கு அருகில் இந்தச் சிறைச்சாலை இருப்பதால்தான் புலிகள் தமக்குத் தேவையான பத்திரிகைகளை அங்கு எடுக்கின்றனர் என்பது புரிந்து போயிற்று.

இன்னொரு விடயம், என்னைப் புலிகள் கைதுசெய்தது 1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி. அதை அடுத்து வந்த பெப்ரவரி மாதத்தில் சிவராத்திரி தினம் வந்தது. பொதுவாக வடபகுதியில் உள்ள சைவ ஆலயங்களில் சிவராத்திரியை மிக விமரிசையாகக் கொண்டாடுவது வழமை. எனவே அந்த வருட சிவாராத்திரி தினத்தன்றும் ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள ஆலயங்களில் சிவாராத்திரி; அமாக்களமாகக் கொண்டாடப்பட்டது. அதுபற்றிய ஒலிபெருக்கி அறிவிப்பைச் செய்த வண்ணம் வாகனம் ஒன்று நாம் தடுத்த வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு அருகால் சென்றபோது, நாம் ஆனைக்கோட்டையில்தான் இருக்கிறோம் என்பது நிரூபணமாகிப் போனது.

இந்தவிதமான அவதானிப்புகள் மூலம் நாம் எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறோம் என்ற தகவல் எம்மில் சிலருக்குத் தெரிந்தாலும், சிறைக்குள் இருந்த எல்லோருக்கும் அது புரிந்திருக்கவில்லை. நான் அங்கு சென்ற சில நாட்களிலேயே எம்மில் சிலர் இணைந்து ‘உயர்மட்டக்குழு’ ஒன்றை உருவாக்கியிருந்தோம். அதில் நான் அங்கு செல்வதற்கு முன்பே இரகசியமாகக் கூடிக் கதைத்துக்கொண்டிருந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புலிகளின் முன்னாள் படகு ஓட்டி பாண்டியன், புலிகளின் முன்னாள் கிளிநொச்சி நிதிப்பொறுப்பாளர் செந்தில், ‘தீப்பொறி’ இயக்க நோபேர்ட் (கேசவன் – கோவிந்தன்), இடைக்காட்டைச் செர்ந்த எனது உறவினர் ஒருவர் உட்பட இன்னும் சிலர் இருந்தோம். எமக்குக் கிடைக்கும் தகவல்கள் எல்லாவற்றையும் நாம் சிறைக்குள் உள்ள எல்லோருக்கும் சொல்லி விடுவதில்லை. ஏனெனில் சிறைக்குள் புலிகள் திட்டமிட்டு அனுப்பிய உளவாளிகளும் இருக்கின்றனர் என நாம் சந்தேகித்ததே அதற்குக் காரணம்.

அப்டியான ஒருவர் – இன்றும்கூட நான் அவரை புலிகளின் உளவாளியென்றே கருதுகின்றேன் – ஒருநாள் அங்கு வந்து சேர்ந்தார். அவரது பெயரை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. அவர் காரை நகரைச் சேர்ந்தவர். 9 வருடங்களாக புலிகள் இயக்கத்தில் இருப்பதாகப் பின்னர் என்னிடம் குறிப்பிட்டார். அவர் வந்ததும் வராததுமாக எனது பெயரை விசாரித்து அறிந்து கொண்டு, எனக்கு அருகிலேயே தனது இருக்கையை அமைத்துக் கொண்டார். தான் ஒரு சின்னப் பிரச்சினை சம்பந்தமாக விசாரணைக்கு வரும்படி புலனாய்வுப் பிரிவினரால் அழைக்கப்பட்டதாகவும், எனவே தானாகவே அந்த முகாமுக்கு வந்து இயக்க சீருடையையும், இயக்கம் வழங்கியிருந்த மோட்டார் சைக்கிளையும், தனது பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியையும் அங்குள்ள பொறுப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டு, கைதிகளுக்குரிய சாரத்தை வாங்கிக் கட்டிக்கொண்டு சிறைக்கு உள்ளே வந்திருப்பதாக என்னிடம் சொன்னார்.




Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-1)
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-2)
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (1)
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (2)

(புலிகளின் தலைவர் பிரபாகரனுடனும் நெருக்கமாகப் பழகும் உயர்மட்ட உறுப்பினர்களில் தானும் ஒருவர் எனக் குறிப்பிட்ட அவர், பின்னொரு சமயம் கதைக்கும் போது, பிரபாகரன் தான் ஏதாவது தவறு செய்துவிட்டதாக உணரும் சமயங்களில், தானாகவே தனக்குத் தண்டனை கொடுக்கும் பொருட்டு தனது இருப்பிடத்தில் உள்ள பதுங்கு குழிக்குள் சில நாட்கள் தங்கித் தன்னை வருத்திக்கொள்வது வழக்கம் என்ற சுவாரசியமான தகவலையும் சொன்னார்!)

பொதுவாக சிறைக்குள் வருபவர்கள் தங்களை என்ன குற்றத்துக்காகப் புலிகள் கைதுசெய்தார்கள் என்பதைத் தமது விசாரணை முடியும் வரை சொல்வதில்லை. அநேகர் விசாரணை முடிந்தாலும்கூடச் சொல்வதில்லை. சிலரைப் பொறுத்தவரை விசாரணை முடிந்தும்கூட தான் என்னத்துக்காகக் கைதுசெய்யப்பட்டேன் என்பது தெரிவதில்லை.

ஆனால் என்னைத் தேடிவந்த அந்தப் புலிகளின் உயர்மட்ட நபர் வந்தவுடனேNயே தனது குற்றம் என்ன என்பதை அவிழ்த்துவிட்டார். அவர் சொன்ன தகவலின்படி தனது பெரிய தாயாரின் கணவர் (பெரிய தகப்பனார்) உடுப்பிட்டியைச் சேர்ந்த இன்னொரு குடும்பப் பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், அதுபற்றித் தனது பெரிய தாயார் தன்னிடம் சொல்லி அழுததாகவும், இயக்க செல்வாக்கைப் பயன்படுத்தி அந்தத் தொடர்பை துண்டித்துவிடும்படி கேட்டுக் கொண்டதாகவும் சொல்லிய அவர், அதன்படி தான் இயக்கச் சீருடையுடன், உடுப்பிட்டிக்குச் சென்று சம்பந்தப்பட்ட பெண்ணை எச்சரித்ததாகவும் சொன்னார். அவர் இதை இயக்கத் தலைமைக்குத் தெரியாமல் செய்திருந்தாலும், அந்தப் பெண்ணின் கணவருக்கும் அவர்கள் பகுதியிலுள்ள புலி இயக்கத்தவர்களுடன் தொடர்பு இருந்ததால், இவரது மிரட்டல் குறித்து அவர்கள் செய்த முறைப்பாட்டின் பேரில் இயக்கத் தலைமை தன்னை விசாரணைக்கு உள்ளாக்கியிருப்பதாகவும் சொன்னார்.

அத்துடன் தான் இயக்கத்தில் அரசியல் வகுப்புகள் எடுப்பது உட்பட பல முக்கியமான பொறுப்புகளில் இருப்பதால், தன்னை அங்குள்ள சாதாரண புலனாய்வாளர்கள் மட்டுமின்றி, அங்குள்ள பொறுப்பாளர் காந்தி கூட விசாரிக்க முடியாது என்றும் சொன்னார். பெரும்பாலும் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா தான் தன்னை விசாரிக்க வருவாh என்றும் சொன்னார்.

அத்துடன் தான் இங்கு வரும்வேளையில் புலிகள் மாணவர்களுக்காக நடாத்தும் 'சாளரம்' என்னும் மாத சஞ்சிகையின் பொறுப்பாளராக இருந்ததாகவும், அதில் முன்பு எமது கட்சியில் இருந்தவரும், என்னுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி பயின்றவருமான அ.கௌரிகாந்தனும் முக்கிய பொறுப்பு வகிப்பதாகவும் சொன்னார். அதுமாத்திரமின்றி நான் கைதுசெய்யப்பட்ட பின்னர், எனது மனைவி கைக்குழந்தையான எனது மகளுடன் எனது விடுதலைக்கு உதவி செய்யும்படி கோரி 'சாளரம்' காரியாலயத்துக்கு கௌரிகாந்தனைச் சந்திக்க வந்ததாகவும் சொன்னார்.

இந்த இடத்தில் ஒன்று சொல்ல வேண்டும் நான் புலிகளால் கைதுசெய்யப்பட்ட பின்பு உடைந்துபோன எனது மனைவி, கண்ணீரும் கம்பலையுமாக எமது கைக்குழந்தையான மகளுடன் இயக்கத்தில் முக்கிய பொறுப்புகளில் இருந்த, எமக்கு உதவி செய்யக்கூடியவர்கள் என்று கருதிய பலரிடம் சென்று எனது விடுதலைக்கு உதவும்படி வேண்டியிருக்கிறார். (ஒரு சோதிடரின் ஆலோசனைப்படி, எனது விடுதலைக்காக ஒரு இலட்சம் தடவைகள் 'ஸ்ரீராம ஜெயம்' என்ற சொல்லையும் எனது மனைவி எழுதிப் பார்த்திருக்கிறார்!)

அவ்வாறு எனது மனைவியால் அணுகப்பட்டவர்களில் ஒருவர் புலிகளின் அப்போதைய அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி. (பிற்காலத்தில் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச் செல்வனின் கூடப்பிறந்த அண்ணன்) மூர்த்தி  முன்பு எமது கட்சியில் (பின்னர் அவர், அ.கௌரிகாந்தன் போன்றோர் காமினி யாப்பா தலைமையிலான 'கீழைக்காற்று இயக்கத்'திலும் இணைந்து வேலை செய்தனர்) இருந்தவர் என்றபடியால், அவர் ஏதாவது உதவி செய்யக்கூடும் என்ற ரீதியில் அவரை எனது மனைவி அணுகினார். நான் ஏதோ குற்றம் செய்தபடியால்தான் கைதுசெய்யப்பட்டுள்ளேன் என்றும், அதனால் தன்னால் இதில் எதுவும் செய்ய முடியாது என்றும் மூர்த்தி கையை விரித்துவிட்டார்.

எனது மனைவி அணுகிய அடுத்தவரும் முன்பு எமது கட்சியில் இருந்தவர்தான். அவர் வேறு யாருமல்ல. புலிகளின் ஆஸ்தானக் கவிஞராகவும், கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளராகவும் இருந்த (இறுதியுத்த நேரத்தில் இராணுவத்திடம் சரணடைந்ததாகக் கூறப்படும்) புதுவை இரத்தினதுரை. அவர் எனது மனைவிக்குச் சொன்ன பதிலோ, மூர்த்தி சொன்ன பதிலைவிட மோசமானது!

தொடரும்

முன்னைய பதிவுகள்